முற்போக்கான திட்டங்களால் முதல் மாநிலமாகத் திகழும் தமிழகம்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்

விழுப்புரம், டிச.6: முற்போக்கான திட்டங்களால்தான் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று திமுக இளைஞரணிச் செயலரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் சனிக்கிழமை நடைபெற்ற விழுப்புரம் சட்டப் பேரவைத் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசியது:

திமுக ஆட்சியில் விழுப்புரம் தொகுதியில் எண்ணற்றதிட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. எல்லீஸ்சத்திரம் அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது. விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு ரூ.4 கோடியில் கூடுதல் கட்டடங்கள், விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்துக்கு ரூ.3.5 கோடியில் மழைநீர் வடிகால் வசதி, கோலியனூர் ஒன்றியம், பில்லூரில் ரூ.8.5 கோடியில் புதிய உயர்மட்டப் பாலம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

21 சமூகநீதிப் போராளிகளுக்கு மணிமண்டபம், முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமிக்கு சிலையுடன் கூடிய நினைவரங்கம் அமைத்துக் கொடுத்தது திமுக அரசுதான். விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசுக் கல்லூரி, எம்.ஜி.ஆர்.அரசு மகளிர் கல்லூரியில் கூடுதல் கட்டடங்களையும் கட்டிக் கொடுத்தது திமுக அரசுதான். பல்வேறு முற்போக்கான திட்டங்களால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகம் விளங்கிக் கொண்டிருக்கிறது. தமிழக வரலாற்றில் இல்லாதவகையில் 11.19 சதவீத வளர்ச்சியை அதாவது இரட்டை இலக்க வளர்ச்சியை தமிழகம் அடைந்திருக்கிறது. இவற்றையெல்லாம் பார்த்து பொறுக்க முடியாத பாஜக அரசு, அதனுடைய கட்டுப்பாட்டிலுள்ள அதிமுக எப்படியாவது தமிழக அரசுக்கு ஏதாவது ஒரு தொல்லை கொடுக்க வேண்டும் என்று பல்வேறு வகைகளில் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றார் உதயநிதி ஸ்டாலின்.

கூட்டத்தில் திமுக துணைப் பொதுச் செயலர் க.பொன்முடி எம்.எல்.ஏ., விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளரும், எம்எல்ஏவுமான இரா. லட்சுமணன், திமுக இளைஞரணி துணைச் செயலர் அப்துல் மாலிக் ஆகியோர் உரையாற்றினர்.

முன்னாள் எம்எல்ஏவும், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலருமான செ.புஷ்பராஜ், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் இரா.ஜனகராஜ், இரா.கண்ணப்பன், பிரேமா குப்புசாமி, தயா.இளந்திரையன், நகர இளைஞரணி அமைப்பாளர் செ.மணிகண்டன், நகரப் பொறுப்பாளர்கள் இரா.சக்கரை, எஸ்.வெற்றிவேல், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செ.தினகரன் மற்றும் ஒன்றியச் செயலர்கள், பேரூர் செயலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் சனிக்கிழமை நடைபெற்ற திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய இளைஞரணிச் செயலரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின். உடன் கட்சியின் துணை பொதுச் செயலர் க.பொன்முடி எம்எல்ஏ, மத்திய மாவட்டப் பொறுப்பாளர் இரா.லட்சுமணன் எம்எல்ஏ உள்ளிட்டோர்.

9,230 பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகள்

விழுப்புரம், டிச.6: விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த 9,230 பயனாளிகளுக்கு ரூ.119.70 கோடி மதிப்பிலான அரசு நலத் திட்ட உதவிகளை தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சனிக்கிழமை வழங்கினார்.

விழுப்புரம் மாவட்ட நிர்வாகம் சார்பில், பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரியில் நடைபெற்றது.

விழாவில் பங்கேற்ற தமிழக துணை முதல்வர் உதயநிதி, தமிழக தொழில் வணிகத் துறை, தாட்கோ, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் உள்ளிட்ட அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த 9,230 பயனாளிகளுக்கு ரூ.119.70 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில், வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் திறன் மேம்பாடு பயிற்சி பெற்ற 90 இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களின் பணி நியமன ஆணைகளையும் துணை முதல்வர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் எம்.பி. துரை.ரவிக்குமார், எம்எல்ஏக்கள் க.பொன்முடி, கே.எஸ்.மஸ்தான், இரா.லட்சுமணன், அன்னியூர் ஆர்.சிவா, ஜெ.மணிகண்ணன், ச.சிவக்குமார், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், எஸ்.பி. ப.சரவணன், கூடுதல் ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா, மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

மகளிர், திருநங்கையர்களுக்கு தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி

விழுப்புரம்,டிச.6: மகளிர் மற்றும் திருநங்கையர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியளிக்கப்படவுள்ளது.

இது குறித்து விழுப்புரம் ஆட்சியர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தொழில்முனைவோராக ஆர்வமும் உறுதியும் கொண்ட கொண்ட மகளிர் மற்றும் திருநங்கையர்களுக்காக மேம்பட்ட பயிற்சி அளிக்கவும் மானியத்துடன் கூடிய பிணையமில்லாக் கடன் வழங்கவும், அவர்களது உற்பத்தி பொருள்களை சந்தைப்படுத்தும் திறனை உயர்த்தும் நோக்கில்,தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என தமிழக அரச அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு லட்சம் மகளிரை தொழில் முனைவோராக்குவதை அரசு இலக்காகக் கொண்டுள்ளது. எனவே, இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைப்பு கொண்ட மகளிர் மற்றும் திருநங்கையர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியும் தொழில் திறன் சார் பயிற்சியும் வழங்கப்படஉள்ளது.ரூ.10லட்சம்வரை தொழில் நுட்பம் கொண்ட கருவிகள் வாங்குவதற்கு வங்கிகள் மூலம் பிணையமில்லாமல் கடனுதவி வழங்கப்படுகிறது.திட்டத் தொகையில் 25 சதவீதம் அதிக பட்சமாக ரூ.2 லட்சம் மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி, சேவை மற்றும் வணிகத் தொழில்கள் எவற்றிலும் ஈடுபடலாம்.

எந்தெந்த தொழில்கள்?: சுற்றுச்சூழலுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தாத மக்கும் தன்மையுள்ள நாப்கின்கள் மற்றும் கேரி பேக்குகள் தயாரித்தல், திடக் கழிவுகளிலிருந்து பயன்மிகு பொருட்கள் தயாரித்தல் தையல், பானை வனைதல், சிற்பம் வடித்தல் போன்ற கைவினைத் தொழில்கள், இன்டீரியர் டிசைனிங், ஃபேஷன் டிசைன் ஸ்டூடியோ, ஃபிட்னஸ் செண்டர்கள் உள்ளிட்ட தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அனைத்து பொதுத்துறை மற்றும் தனியார் வணிக வங்கிகள், தாய்கோ வங்கி, கூட்டுறவு வங்கி மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் கடன் பெறலாம். மகளிர் தொழில்முனைவோரின் சந்தைப்படுத்தும் திறனை உயர்த்துவதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்படும்.18 முதல் 55 வயதுக்குள்பட்ட தமிழகத்தில் நிரந்தரமாக வசிக்கும்கமகளிர் மற்றும் திருநங்கையர் இத் திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

அடிப்படைக் கல்வித் தகுதி மற்றும் குடும்ப வருமான வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. தகுதி மற்றும் விருப்ப முடையவர்கள் கடவுச் சீட்டு அளவிலான புகைப்படம், வயதை உறுதி செய்ய ஆதார் அட்டை, குடும்ப அட்டை, விலைப்புள்ளி, திட்ட அறிக்கை, வங்கிக் கணக்கு எண் விவரங்களுடன் இணையவழியில் விண்ணப்பிக்கலாம்.

பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில்செயல்படும்மாவட்டத்தொழில் மைய பொது மேலாளர் நேரிடையாகவோ அல்லது 04146-223616,8925534035,9443728015 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு விவரங்களைபெறலாம்எனம்ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

தைலாபுரத்தில் அம்பேத்கர் சிலைக்கு மருத்துவர் ராமதாஸ் மரியாதை

தைலாபுரம் தோட்டத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பாமக நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ்.

விழுப்புரம், டிச.6: அம்பேத்கரின் 69-ஆவது நினைவு தினத்தையொட்டி, திண்டிவனத்தை அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் உள்ள அவரது சிலைக்கு பாமக நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ் சனிக்கிழமை மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, பாமகவினர் புகழஞ்சலி முழக்கங்களை எழுப்பினர். நிகழ்வில் கட்சியின் விழுப்புரம் கிழக்கு மாவட்டச் செயலர் ஜெயராஜ் மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

பின்னர், மருத்துவர் ச.ராமதாஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: அண்ணல் அம்பேத்கர் வகுத்துத் தந்த சமூக நீதி கொள்கை உயர்த்திப் பிடிக்கப்பட வேண்டும். அவரைப் போன்ற ஒரு தலைவர் தோன்றவில்லையெனில், இந்தியாவில் ஒடுக்கப்பட்ட, பட்டியலின மற்றும் பிற சமூக மக்கள் கல்வி, வேலையில் சேர்ந்திருக்க முடியாது. அவர் விட்டுச்சென்ற கொள்கைக்காக தொடர்ந்து போராடுவோம், வெற்றிபெறுவோம் என்றார்.

தொழிலாளி தூக்கிட்டுத் தற்கொலை

விழுப்புரம், டிச. 6: விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி அருகே தொழிலாளி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

விக்கிரவாண்டி வட்டம்,மேலக்கொந்தை மேட்டுத் தெருவைச் சேர்ந்தவர் குமார் (53), கூலித் தொழிலாளி.

இவரது மருமகன் மணிகண்டன் என்பவர் உடல்நிலை பாதிக்கப்பட்டு விழுப்புரம் மாவட்ட அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதனால் மன உளைச்சலில் இருந்து வந்த குமார் சனிக்கிழமை மேலக்கொந்தை அடுத்த வி.சாத்தனூர் பகுதியில் மரத்தில் தூக்கிட்டுத் தற்கொலைக்கு முயன்றுள்ளார். இதையடுத்து மீட்கப்பட்ட குமாரை உறவினர்கள் அவசர ஊர்தி மூலம் விழுப்புரம் மாவட்ட அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு மருத்துவர்கள் பரிசோதித்துப் பார்த்தபோது குமார் ஏற்கெனவே உயிரிழந்திருந்தது தெரியவந்தது. இதுகுறித்த புகாரின்பேரில் விக்கிரவாண்டி போலீஸார் சனிக்கிழமை வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

தோட்டக்கலைத் துறை மூலம் 5 பேருக்கு காய்கறி வண்டிகள்

விழுப்புரம், டிச.6 : கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் தோட்டக்கலைத்துறை மூலம் 5 பயனாளிகளுக்கு நடமாடும் காய்கறி வண்டிகள் வழங்கப்பட்டன.

தோட்டக்கலைத்துறை சார்பில் தேசியத் தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் உளுந்தூர்பேட்டை பகுதியைச் சேர்ந்த தகுதியுள்ள மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு நடமாடும் காய்கறி விற்பனை வண்டிகள் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

உளுந்தூர்பேட்டை எம்.எல்.ஏ. ஏ.ஜெ.மணிக்கண்ணன் தலைமை வகித்து, 5 பயனாளிகளுக்கு காய்கறி விற்பனை வண்டிகளை வழங்கினார். மேலும் தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு காய்கறி விதைகள், மரக்கன்றுகள் உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

நிகழ்வில்தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் குமரேசன், உதவித் தோட்டக்கலை அலுவலர் அறிவழகன், விசிக மாவட்டச் செயலர் அறிவுக்கரசு, நகர்மன்ற உறுப்பினர் செல்வக்குமாரி ரமேஷ்பாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உளுந்தூர்பேட்டையில் பயனாளிகளுக்கு நடமாடும் காய்கறி வண்டிகளை வழங்கிய எம்.எல்.ஏ. ஏ.ஜெ.மணிக்கண்ணன். உடன், அலுவலர்கள் உள்ளிட்டோர்.

கபீர் புரஸ்கார் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

விழுப்புரம், டிச.6: சமூக நல்லிணக்கத்துக்காகப் பாடுபட்டவர்கள் கபீர் புரஸ்கார் விருது பெற விண்ணப்பிக்கலாம் என்று விழுப்புரம் ஆட்சியர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆட்சியர் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

சமுதாயம் மற்றும் வகுப்பு நல்லிணக்கத்துக்கு பாடுபடும் நபர்களுக்கு கபீர் புரஸ்கார் விருது ஆண்டுதோறும் குடியரசு தின விழாவில் தமிழக முதல்வரால் வழங்கப் பட்டு வருகிறது. அந்த வகையில் நிகழாண்டிலும் இவ்விருது வழங்கப்பட உள்ளது. வகுப்பு கலவரம். வன்முறை ஆகியவற்றின் போது ஜாதி, இனம் கடந்து, பிற ஜாதி,இனம், வகுப்பைச் சார்ந்தவர்கள் அல்லது அவர்களது உடைமைகளை காப்பாற்றி தொண்டு செய்தவர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம் . தகுதியானவர்கள், தமிழக அரசின் விருதுகள ; இணையதளம் வழியாக டிச.15 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம். இறுதி நாளுக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்று கொள்ளப்படாது என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் தமுமுகவினர் கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம்

விழுப்புரம் நகராட்சித் திடலில் சனிக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற விசிக பொதுச் செயலர் துரை.ரவிக்குமார் எம்.பி, தமுமுக மாநிலச் செயலர் மு.யா. முஸ்தாக்தீன், மாநில வர்த்தக அணிப் பொருளாளர் எஸ்.எம்.அப்துல் ஹக்கீம் உள்ளிட்டோர்.

விழுப்புரம், டிச.6 : விழுப்புரத்தில்தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் சார்பில் கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட டிசம்பர் 6-ஆம் தேதியன்று வழிபாட்டுத் தலங்கள் உரிமைப் பாதுகாப்பு குறித்து தமுமுக சார்பில் ஆண்டுதோறும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவது வழக்கம். இதைத் தொடர்ந்து மக்களின் வாழ்வுரிமை, வழிபாட்டு உரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். பாபர் மசூதி இடிப்பு விவகாரத்தில் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், வக்ஃபு வாரியத் திருத்தச் சட்டம், வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப்பணிகளை கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம்நடத்தப்பட்டது.

விழுப்புரம் நகராட்சித் திடலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு தமுமுக மாவட்டத் தலைவர் அஸ்கர் அலி தலைமை வகித்தார். விழுப்புரம் வடக்கு மாவட்டத் தலைவர் (பொ) கே.ஜான் பாஷா, உலமா அணி மாவட்டச் செயலர் ஏ.உமர் பாரூக், புதுச்சேரி மாவட்டத் தலைவர் என்.எம்.எஸ்.சகாபுதீன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்டச் செயலர் எஸ்.பஜில்தீன், பொருளாளர் எஸ்.ரியாசுதீன், மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் ஹெச். முகமது ஜக்காரியா, கே.எஸ்.எம். அப்பாஸ் முன்னிலை வகித்தனர்.

விழுப்புரம் எம்.பி.யும், விசிக பொதுச் செயலருமான துரை.ரவிக்குமார், தமுமுக மாநிலச் செயலர் மு.யா, முஸ்தாக்தீன், மாநில வர்த்தக அணிப் பொருளாளர் எஸ்.எம். அப்துல்ஹக்கீம், தலைமைக்கழகப் பேச்சாளர் ஏ.பிஸ்மில்லாகான், இந்தியயூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாவட்டச் செயலர் எஸ்.எம்.அமீர் அப்பாஸ், விசிக மாவட்டச் செயலர் ர.பெரியார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் ஆ.சௌரிராஜன், காங்கிரஸ் மாநில நிர்வாகி சிறுவை. ராமமூர்த்தி உள்ளிட்டபலர் கண்டனஉரையாற்றினர். இதில் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

வடலூர் நகராட்சி

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இரட்டை உறை முறையில்

ந.க.எண்.1865/2025/இ1 நாள் : 05.12.2025

1. 6வது வரிவிதி குழுவின் கற்றறிந்த நலங்கருதி மேற்படுத்த கற்றுவை மானிய 2024 – 2025. வடலூர் நகராட்சிக்குட்பட் வார்டு எண்.23 மற்றும் 24, பார்வதிபுரம் அருட்பிரகாச வள்ளலார் தெரு நிலையத்திலிருந்து வார்டு எண்.25, நடேசனார் நகர் வழியாக VKT தேசிய நெடுஞ்சாலை வரை நூர் சாலையாக அணுகு சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். 2. மதிப்பீடு ரூ.95.00 இலட்சம். 3. முன்வைப்புத் தொகை ரூ.95000/- 4. முன் ஒப்பந்தப்புள்ளிக் கூட்டம் 12.12.2025 அன்று காலை 11.00 மணிக்கு வடலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும். 5. பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் நமுனாவினை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த இணையதள முகவரியில் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம். 6. கடைசி நாள் மற்றும் நேரம் 23.12.2025 மற்றும் 3.00 மணி வரை.

வ. எண்.	விவரம்	நாள், நேரம் மற்றும் இடம்
1.	ஒப்பந்தப்புள்ளி நமுனா பதிவிறக்கம் செய்வதற்கான நாள் மற்றும் நேரம்	23.12.2025 பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக வலைதள நாளதுவிலிருந்து பதிவிறக்கம் செய்யக் கொள்ளலாம்.
2.	ஒப்பந்தப்புள்ளி சமர்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	23.12.2025 பிற்பகல் 3.00 மணி வரை
3.	ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள், இடம் மற்றும் நேரம்	23.12.2025 பிற்பகல் 3.30 மணி நகராட்சி அலுவலகம், வடலூர்

7. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் அன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கடுத்த நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும். 8. ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறைகளில் சமர்பிக்க வேண்டும், வெளி உறையில் தகுதியை நிரூபிப்பதற்கான ஆவணங்களும் அதன் வரவு செலவு வரைவோலை மற்றும் அசல் சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் மூடி முத்திரையிடப்பட்டு (Technical bid) உள் உறையில் நிதிநிலைமையும் (Price bid) வலைவழியாத்தில் பதிவேற்றம் செய்வதுடன் அலுவலகத்தில் 23.12.2025 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் சமர்பிக்கப்பட வேண்டும். மேலும் விபரங்கள் தேவைப்படின், வடலூர் நகராட்சியில் பொறியியல் பிரிவில் அலுவலக வேலை நாட்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

செ.எ.தொ.இ./ 6510 /ஒப்பந்தப்புள்ளி/2025

ஆணையாளர், வடலூர் நகராட்சி.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

கிளை அலுவலகம்: எண்.25, J J காம்ப்ளெக்ஸ், பண்ருட்டி மெயின் ரோடு, வடலூர், கடலூர், தமிழ்நாடு - 607303

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன் கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	13.11.2025 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1638210170000016 / 1. Mr. தேவராஜ் S. 2.Mrs.பூங்கொடி D (Mrs.Poongudi D)	(i) 29.11.2021 & 26.11.2021 அன்றுள்ளபடி ₹ 7,81,271/- (ரூபாய் ஏழு லட்சத்து எண்பத்தொராயிரத்து இருநூற்று எழுபத்து ஒன்று மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 18.04.2022 & நேரடி சுவாதீனம் - 07.06.2025	28.11.2025 அன்றுள்ளபடி ₹17,04,225.01 (ரூபாய் பதினேழு லட்சத்து நான்காயிரத்து இருநூற்று இருபத்து ஐந்து மற்றும் பைசா ஒன்று மட்டும்)	₹ 9,07,000/- (ரூபாய் ஒன்பது லட்சத்து ஏழாயிரம் மட்டும்)	₹ 90,700/- (ரூபாய் தொண்ணூறாயிரத்து எழுநூறு மட்டும்)

சொத்து விவரம்: கடலூர் பதிவு மாவட்டம், குறிஞ்சிப்பாடி சார் பதிவு எல்லைக்குட்பட்ட குறிஞ்சிப்பாடி பஞ்சாயத்து யூனியன் எல்லை, கண்ணாடி மதுரா, பெரியகண்ணாடி கிராமம், தோப்பு தெரு, கடலூர் மாவட்டம் என்னும் முகவரியில் நத்தம் புதிய சர்வே எண். 102-1-8.01.0 ஏர்ஸ், தற்போது ஒழுங்குமுறை திட்ட மறு சர்வே எண்.178-14-00200 சதுர மீட்டர், பழைய சர்வே எண்கள்.53/ மற்றும் 63/1, பட்டா எண்.144, பரப்பு 0.05 சென்டு (அதாவது) 2180 சதுர அடி நிலம் மற்றும் இதில் செங்கற்களால் கட்டப்பட்டுள்ள RCC தளம் போட்ட குடியிருப்பு கட்டிடம். (26 X 22 ½ = 585 சதுர அடி), அதனுடன் மின்சார இணைப்பு எண்.732. பொருத்தப்பட்டுள்ளவைகள், டெபாசிட்டுகள், அதனுடன் அனைத்து உபகரணங்கள், பொருத்தப்பட்டுள்ளவைகள், அதனுடன் இணைந்த தளங்களும் பகுதிகளும். எல்லைகள்: தோப்பு தெருவுக்கு கிழக்கு, S.தேவராஜ் மனைக்கு மேற்கு, ராதாகிருஷ்ணன் வீட்டு மனைக்கு வடக்கு, சிவநாதம் வீட்டு மனைக்கு தெற்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 31.12.2025 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 30.12.2025 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 29.12.2025 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.S.ஞானவேல் - 98410 17131 / Mr.டீஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறுவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.

i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

தேதி: 07.12.2025

CHANGE OF NAME

I, **ARAVIND MANO** (Date of Birth : **02.10.1988**) S/o.**SEGAR MANO**, residing at No.3, Ambedhkar Street, Pudhu Nagar, Oulgaret, Puducherry - 605010, I have changed my surname from **SEGAR MANO** to **MANO** henceforth he shall be known as **MANO** and I have changed my given name from **ARAVIND MANO** to **ARAVIND**, henceforth I shall be known as **ARAVIND**.

- ARAVIND MANO

பொது அறிவிப்பு

AHAMED ALI,
த/பெ. **ABDUL JALEEL**
எண்.2/1028, VGP நகர்,
வழுதரெட்டி, விழுப்புரம், விழுப்புரம் மாவட்டம், என்ற முகவரியில் வசிக்கும் நான் **16.11.1990** அன்று விழுப்புரம், விழுப்புரம் மாவட்டத்தில் பிறந்தேன் என்றும் எனது தந்தை மற்றும் தாய் பெயர் முறையே திரு. **ABDUL JALEEL** மற்றும் திருமதி. **RABIATHUL BASARIYA** என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

- AHAMED ALI

கடன் வசூல் தீர்ப்பாயம்-II, சென்னை

5வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.

D